தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்
எண் 100, அண்ணாசாலை, கிண்டி, சென்னை 600 032
தொலைபேசி 044-22201337
மின்னஞ்சல் முகவரி ombudsmanlocal@tn.gov.in
இணையதள முகவரி www.tnlbo.tn.gov.in

முன்னிலை: மகேசன் காசிராஜன், இ.ஆ.ப (ஓ)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

**ஆணை எண் 94/மா/2024**
**நாள் 13.09.2024**

திரு மு. ரவிசங்கர் — மனுதாரர்
சென்னை—28.

மண்டல அலுவலர் — எதிர் மனுதாரர்
மண்டலம் 9
பெரு நகர சென்னை மாநகராட்சி

சென்னை மந்தைவெளிபாக்கம், பாரதி நகர், கதவு எண் 23 என்கிற முகவரியில் வசிக்கும் திரு மு. ரவிசங்கர் என்பவரின் 28.12.2023 நாளிட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 28.12.2023 அன்று பெறப்பட்டு 94/மா/2024 என எண்ணிட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. மனுதாரரின் முறையீட்டு மனு பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

## ஆணை

சென்னை மந்தைவெளிபாக்கம், பாரதி நகர், கதவு எண் 23 என்கிற முகவரியில் வசிக்கும் திரு மு. ரவிசங்கர் என்பவர் தனது 28.12.2023 நாளிட்ட மனுவில் கீழ்க்காணும் புகார்களை தெரிவித்துள்ளார்.

"மேற்கண்ட விலாசத்தில் வசிக்கும் நான் தகவல் அறியும் உரிமைச்சட்டம், சமூக ஆர்வலராகவும், அட்வகேட் டாக் பத்திரிக்கை ஆசிரியராகவும் சென்னை மாவட்டம் மயிலாப்பூர் தொகுதியில் செயல்பட்டு வருகிறேன் என்றும் 1. சாந்தோம் ஹைரோடு 2. லஸ் கார்னர் தெற்கு, வடக்கு, மேற்கு, கிழக்கு மாட வீதி, வன்னியம்பதி ஆண்டி மானிய தோட்டம், ஆர்.ஏ.புரம் இடங்களில் உரிய தடையின்மை சான்று, சென்னை மாநகராட்சி மற்றும் காவல் துறை அதிகாரிகளிடம் கடித வழியாக ஒப்புதல் பெற்று அனுமதி இல்லாமல் தன்னிச்சையாக ஆளும் கட்சியினர் பொதுமக்கள் பயன்பாட்டில் உள்ள நடைபாதை வழியில் கொடிகம்பங்களையும், கட்சி கொடிகளையும் சாலை ஓரங்களிலும், பொதுமக்கள் கூடும் இடங்களிலும் நட்டு வைத்து பொது மக்களுக்கு பங்கம் எற்படும் வகையில் செயல்படுவதை தொடர்வதை மிகவும் அதிர்ச்சி அடைகிறேன் என்றும், சமீபத்தில் முக்கிய துறையான காவல் துறை மற்றும் நிகரான சென்னை மாநகராட்சி துறை மற்றும் இதர துறைகளில் பணியாற்றும் அரசு ஊழியர்கள் அரசு அதிகாரிகள் இதனை வேடிக்கை பார்த்து வருகிறார்கள் என்றும் ஏன் என்று கேட்டால் எங்கள் கைகள் முக்கிய

கட்சி பிரமுகர்களால் இரும்பு கம்பியால் கட்டப்பட்டுள்ளது என வெட்கத்துடன் விழும்பி வேதனையுடன் மிக வருத்தத்துடன் சொல்வதை தொடர்ந்து மிகவும் அதிர்ச்சி அடைகிறேன். எனவே மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள், அரசு சார்புச் செயலாளர், உள்துறை காவல் தலைமைச் செயலாளர் அவர்கள் நேரடியாக கள ஆய்வு செய்து ஆய்வு அறிக்கை அடிப்படையில் பொதுமக்கள் பயனடைய ஆங்காங்கே ஆக்கிரமிப்பு செய்துள்ள கொடிகம்பங்களையும் கட்சி கொடிகளையும் உடனடியாக அகற்றி கல்வெட்டுகளை இடித்து நடைபாதைகளை பொதுமக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வர மூத்த குடிமகன், மாற்றுத்திறனாளி, கர்ப்பிணி பெண்கள், நலன் கருதி இப்புகாரை தன்னலம் இன்றி உயர் அலுவலருக்கு புகைப்படம் ஆதாரத்துடன் சமர்ப்பிக்கிறேன். எனவே துணிவு, நேர்மை, கடமை, கண்ணியம், கட்டுப்பாட்டு மிகுந்த அரசு அதிகாரிகள் அவர்களது ஆளுமை அதிகாரி அதிகாரத்துக்கு உட்பட்டு உடனடியாக ஆக்கிரமிப்பு கொடி கம்பங்கள், கல்வெட்டுகளை இடித்து அப்புறப்படுத்த சம்பந்தப்பட்ட துறை அரசு அதிகாரிகளுக்கு சுற்றறிக்கை குறிப்பாணை வெளியிட உத்தரவு வழங்க வேண்டுகிறேன். எனவே நான் கூறிய புகார்/தகவல் மீது கடுமையான நடவடிக்கை எடுக்க இறைஞ்சுகிறேன்'' என தெரிவித்துள்ளார்.

2) மேற்கண்ட புகார் மனுவின் மீதான அறிக்கையை அனுப்புமாறு இம்முறைமன்ற நடுவ 04.01.2024 நாளிட்ட கடிதத்தின் மூலம் பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 9ன் மண்டல அலுவலரிடம் கோரப்பட்டது.

பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 9ன் அலுவலகத்திலிருந்து விசாரணை நாள் வரை அறிக்கை ஏதும் பெறப்படவில்லை

3) இம்மனு தொடர்பாக மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் ஆகியோரை 27.08.2024 அன்று நடைபெறும் நேரடி விசாரணைக்கு ஆஜராகுமாறு இவ்வலுவலகத்தின் 13.08.2024 நாளிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

4) மனுதாரர் 27.08.2024 அன்று நடைபெற்ற விசாரணையில் நேரடியாக ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளார்.

பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம் 9ற்கு உட்பட்ட சாந்தோம் ஹைரோடு, லஸ் கார்னர் தெற்கு, வடக்கு, மேற்கு, கிழக்கு மாடவீதி, ஆண்டி மானிய தோட்டம், ஆர்.ஏ.புரம் இடங்களில் பெருநகர சென்னை மாநகராட்சி மற்றும் காவல்துறையின் முறையான அனுமதி பெறாமல், கொடி கம்பங்கள் அமைத்து பொதுமக்களுக்கு இடையூறு ஏற்படுகிறது. இது குறித்து பெருநகர சென்னை மாநகராட்சியில் பல தடவை புகார் மனு அளித்தும் உரிய நடவடிக்கை எடுக்கவில்லை. எனவே அனுமதி இல்லாமல் அமைக்கப்பட்டிருக்கும் கொடிகம்பங்கள், கல்வெட்டுகள் ஆகியவற்றை அகற்றி நடைபாதையை , பொதுமக்கள் பயன்படுத்தும் வகையில் நிரந்தர நடவடிக்கை எடுக்குமாறு பெருநகர சென்னை மாநகராட்சிக்கு உத்தரவிடுமாறு இம்முறைமன்ற நடுவர் அவர்களை தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறேன்.

5) பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 9ன் செயற்பொறியாளர் 27.08.2024 அன்றைய நேரடி விசாரணையில் ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளார்.

மயிலாப்பூர் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட சென்னை மண்டலம் 9க்குட்பட்ட பகுதியில் 200 வார்டுகள் உள்ளன. இப்பகுதியில் பலதரப்பட்ட கட்சியினரால் சுமார் 169 கொடிக்கம்பங்கள் மாநகராட்சியின் அனுமதியின்றி நடப்பட்டு உள்ளன. கட்சி கொடிகளை அகற்றும்போது சட்ட ஒழுங்கு பிரச்சனை ஏற்பட வாய்ப்பு உள்ளது. இருப்பினும் மண்டலம் 9, பகுதி 25க்குட்பட்ட நடைபாதைகளில் மாநகராட்சியின்

அனுமதியின்றி அமைக்கப்படும் கொடிக்கம்பங்களை ஒரு மாதத்திற்குள் அகற்ற உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதை இம்முறை மன்ற நடுவத்தின் முன் தெரிவித்துக் கொள்கிறேன்.

6) மனுதாரரின் மனு, வாக்குமூலம் மற்றும் பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 9ன் செயற்பொறியாளரின் வாக்குமூலம் ஆகியவை இம்முறைமன்றத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டதில் பின்வரும் விவரங்கள் தெரியவருகின்றன.

மனுதாரர் பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 9–ல் சாந்தோம் ஹைரோடு, லஸ் கார்னர், தெற்கு வடக்கு, மேற்கு, கிழக்கு மாடவீதி, வன்னியம்பதி, ஆண்டி மானிய தோட்டம், ஆர்.ஏ.புரம் இடங்களில் பெருநகர சென்னை மாநகராட்சி மற்றும் காவல்துறையின் முறையான அனுமதி பெறாமல் கொடிகம்பங்கள் அமைத்து பொதுமக்களுக்கு இடையூறு செய்கிறார்கள் என்றும், இது குறித்து பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 9ற்கு பல புகார் மனுக்கள் அளித்தும் எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை என்று தெரிவித்து, கொடிகம்பங்கள் மற்றும் கல்வெட்டுக்களை அகற்ற பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 9ன் அலுவலர்களுக்கு உரிய உத்தரவு பிறப்பிக்குமாறு கோரியுள்ளார்.

பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 9ன் செயற்பொறியாளர், தனது வாக்குமூலத்தில் மண்டலம் 9, பகுதியில் 200 வார்டுகளில் பல தரப்பட்ட கட்சியினர் சுமார் 169 கொடிகம்பங்களை மாநகராட்சியின் அனுமதியில்லாமல் அமைத்துள்ளனர் என்றும், இவற்றை அகற்றினால் சட்ட ஒழுங்கு பிரச்சனை எற்பட வாய்ப்பு உள்ளது என்றும் இருப்பினும், மண்டலம் 9, பகுதி 25க்குட்பட்ட நடைபாதைகளில் அனுமதியில்லாமல் அமைக்கப்பட்டிருக்கும் கொடிகம்பங்களை ஒரு மாதத்திற்குள் அகற்ற நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்று தெரிவித்துள்ளார்.

மனுதாரர் கடந்த வருடம் மனு அளித்தவுடன் பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 9ன் அலுவலர்கள் உரிய சட்டபூர்வமான நடவடிக்கைகளை மேற்கொண்டிருக்க வேண்டும். ஆனால் மனுதாரரின் மனு மீது எவ்வித நடவடிக்கையும் உரிய காலத்திற்குள் எடுக்கப் பட்டதாக தெரியவில்லை. இம்முறைமன்றம் மனுதாரரின் மனு மீது விசாரணைக்கு உத்தரவிட்டு, மனு மீதான அறிக்கை கோரப்பட்டும், மண்டலம் 9 ன் அலுவலர்கள் உரிய அறிக்கை எதும் இம்முறைமன்றத்தில் விசாரணை நாள் வரை சமர்ப்பிக்கவில்லை. பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 9ன் செயற்பொறியாளர் தன்னுடைய வாக்குமூலத்தில் உறுதி அளித்தவாறு மாநகராட்சியின் அனுமதியில்லாமல் மண்டலம் 9, பகுதி 25க்குட்பட்ட நடைபாதைகளில் அமைக்கப்பட்டிருக்கும் கொடிகம்பங்களை ஒரு மாதத்திற்குள் அகற்ற உரிய சட்டபூர்வமான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும், அவ்வாறு எடுக்கப்பட்ட நடவடிக்கை குறித்த அறிக்கையை இம்முறைமன்றத்திற்கு அனுப்பிவைக்குமாறும் பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 9ன் மண்டல அலுவலர் மற்றும் செயற்பொறியாளர் ஆகியோருக்கு இம்முறைமன்றம் ஆணையிடுகிறது.

2024ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 13–ஆம் நாள் என்னால் கையொப்பமிட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

//ஒப்பம்//
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

பெறுநர்

1) திரு மு. ரவிசங்கர்
   எண் 23, பாரதி நகர் மந்தவெளிபாக்கம்,
   சென்னை 600 028

2) ஆணையர்,
   பெருநகர சென்னை மாநகராட்சி
   ரிப்பன் மாளிகை
   சென்னை 600 003

3) மண்டல அலுவலர்
மண்டலம் 9,
பெருநகர சென்னை மாநகராட்சி
எண் 1, லேக் ஏரியா 4வது குறுக்கு தெரு
நுங்கம்பாக்கம், சென்னை 600 034

4) நகராட்சி நிர்வாக இயக்குநர்
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
எண் 75 சாந்தோம் நெடுஞ்சாலை
ராஜா அண்ணாமலைபுரம்
சென்னை 600 028

5) இணை இயக்குநர்,
ஒருங்கிணைப்பாளர் (Nodal Officer)
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
எண் 75 சாந்தோம் நெடுஞ்சாலை
ராஜா அண்ணாமலைபுரம்
சென்னை 600 028

<u>நகல்</u>
மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச்செயலர்
இகோ/உதிரிகள்

//ஆணைப்படி/அனுப்பப்படுகிறது//

சட்ட ஆலோசகர்/செயலாளர் (FAC).